**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

OS.685/2018

நாள். 19.11.2024

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 19.11.2024 ம் நாளாகிய இன்று திருமதி.மோகனவள்ளி, Gr-II பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி: | :பி.வா.சா.2 | ஜாதி | :----------- |
| பெயர் | சேகர் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**முதல் விசாரணை**

நான் தாரமங்கலத்தில் ஆவண எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்தது. அந்த அழைப்பானையின்படி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளேன். 08.11.2006 ம் ஆண்டு செட்டில்மெண்ட் பத்திரம் கந்தசாமி என்பவர் அவரது இளைய மகளாக சம்பூரணத்திற்கு எழுதிகொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை நான் தான் தயாரித்தேன் மேற்படி ஆவணம் தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2975/2006 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் என்னென்ன சொத்துக்கள் காட்டப்பட்டது என்றால் பனிக்கனூர் கிராமத்தில் சர்வே எண்.51/2 ல் மொத்தம் 5 ஏக்கர் 10 செண்ட் உள்ளது அதில் 2 ஏக்கர் நிலம் மட்டும் கந்தசாமி சம்பூரணத்திற்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். மேற்படி கந்தசாமி ஆவணம் எழுத என்னிடம் வந்தபோது அவரிடம் சொத்துக்கள் எப்படி தனக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னார் என்றால் UDR பட்டாப்படியும், அனுபவத்தின்படியும் பாத்தியம் உள்ளதாக சொன்னார். மேற்படி ஆவணம் எழுதப்பட்டபோது கந்தசாமி இளைய மகளான சம்பூரணம் அவரது விருப்பப்படி திருமணம் செய்துகொண்டதாலும், திருமணம் நல்லமுறையில் செய்யாததாலும், சீர்வரிசகைள் செய்யவில்லை என்பதாலும் சம்பூரணத்திற்கு 2 ஏக்கர் நிலம் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்துள்ளார். மேற்படி 2 ஏக்கர் நிலம் தானசெட்டில்மெண்ட் எழுதிய உடனே சம்பூரணத்திற்கு சுவாதீனமும் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி

செட்டில்மெண்ட் ஆவணத்திலேயே செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து கந்தசாமியின் இரத்த சம்மந்தமான ஆண், பெண் வாரிசுகளுக்கு எந்த உரிமையும் ஏற்படுவதில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மேற்படி ஆவணத்திலேயே தானசெட்டில்மெண்ட் ஆவணம் எந்த சூழ்நிலையிலும் கந்தசாமி ரத்து செய்யப்போவதில்லை என குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றால் ஆம். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள 2 ஏக்கர் சொத்திற்கு செக்குபந்திகள் குறிப்பிட்டுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆம், மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் ஆவணத்தை எழுதிகொடுத்த கந்தசாமி ஒவ்வொரு பக்கத்திலும் அவரது கையெழுத்தினை போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் பாப்பம்பாடி கிராமத்தை சேர்ந்த சின்னதம்பி கவுண்டர் மகன் மாணிக்கம் முதல் சாட்சியாகவும், இரண்டாவது சாட்சியாக வனிச்சம்பட்டி காட்டுவளவை சார்ந்த பன்னாடி கவுண்டர் மகன் ஆணைகவுண்டர் ஆகியோர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள்.

மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு எனது அலுவலகத்திற்கு யார் யார் வந்தார்கள் என்றால் கந்தசாமி, சம்பூரணம், சாட்சிகள் இருவரும் வந்திருந்தார்கள். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு வழக்கறிஞர் மனோகரன் உடன் வந்து உதவினாரா என்றால் இல்லை. அதற்கு பின்பு 24.11.2011 தேதியில் மேற்படி சம்பூரணம் மேற்படி செட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்ட சொத்தினை தனியாக உட்பிரிவு செய்து தனது கணவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் மேற்படி பி.வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள அதே சொத்துக்களை அப்படியே பி.வா.சா.ஆ.2 ல் செட்டில்மெண்ட் எழுதப்பட்டுள்ளது. 2011 ல் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமும் நான் தான் தயாரித்தேன்.

**(குறுக்குவிசாரணை வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-DW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்